FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301632

1. District : Madurai PS: V & AC Year: 2026 FIR No.: 10/2026 Date: 20-7-2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7 (a) of PC ACT

(ii) Act சட்டம்: Pc ACt 1988 as amended by Sections பிரிவுகள்: 1988 as amended by

(iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: Prevention of Corruption (Amendment) Act 2018

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 1) 9-7-2026 / 10.30 Am
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : Time to : 2) 13-7-2026 / 11.00 Am
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை 3) 20-7-2026 / 10.45 Am

(b) Information Received at PS. Date : Time : 15.45 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20-7-2026 நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time : 17.15 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 20-7-2026 நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Typed Petition

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: About 67kms South west
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் O/o The Assistant Engineer

Beat Number : (b) Address : TNPDCL, T. RamanathaPuram
முறைக் காவல் எண் முகவரி Madurai District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. Guruvammal (b) Father's/ Husband's Name : Periya sankaran
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 30/7/2026 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : Door No 3/72, West Street, S. Pappi-
தொழில் முகவரி - nayakkanPatti, Peraiyur (Tk) Madurai District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Prabhu, Assistant Engineer, O/o The Assistant Engineer TNPDCL, T. RamanathaPuram, Madurai District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

separate sheet attached Pages 3 to 7

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முத-அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

LTI

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

L.T.B 20-7-26

15. Date & Time of despatch to the court: 20-7-2026 18.30hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் N. Bharathi Priya
Rank: நிலை Inspector of Police
No. எண்
VGAC, Madurai

பணிந்து **சமர்ப்பிக்கப்படுகிறது,**

இன்று 20.07.2026-ஆம் தேதி மாலை 15:45 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்டம், பேரையூர் தாலுகா, எஸ். பாப்பிநாயக்கன்பட்டி, மேற்குதெரு, கதவு எண். 3/72 என்ற முகவரியில் வசித்து வரும் திருமதி. பெ. குருவம்மாள், க/பெ. (லேட்) பெரிய சங்கரன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு ஒன்றை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் பெ. குருவம்மாள், க/பெ. (லேட்) பெரியசங்கரன், கதவு எண். 3/72, மேற்கு தெரு, எஸ். பாப்பிநாயக்கன்பட்டி, பேரையூர் தாலுகா, மதுரை மாவட்டம் பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் பேரையூர் எஸ்.பாப்பி-நாயக்கன்பட்டி மேற்கு தெருவில் எனது பேத்தி நிதர்சனா உடன் வசித்து வருகின்றேன். எனது கணவர் பெரியசங்கரன் அவர்கள் கடந்த ஏழு வருடங்களுக்கு முன்பு காலமாகி விட்டார். நான் படிக்கவில்லை. நான் எனது தோட்டத்தில் விவசாயம் செய்து வருகின்றேன். எனது மூத்த மகன் முருகன் இந்திய இராணுவத்தில் பணி செய்து வருகின்றார். எனது இளைய மகன் சங்கரபாண்டி கோயம்புத்தூரில் டிரைவராக வேலை செய்து வருகின்றார். எனது மகள் மல்லிகா அவரது பிள்ளைகளுடன், நான் குடியிருக்கும் வீட்டிற்கு அருகிலே வடக்கு பக்கம் உள்ள வீட்டில் வசித்து வருகின்றார். எனது கணவரின் தம்பி சங்கரன் என்பவர் நாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு அருகிலே வசித்து வருகின்றார். நான் குடியிருந்து வரும் வீடு எங்களின் பூர்வீக வீடாகும். எனது வீட்டில் மின் இணைப்பு பல வருடங்களுக்கு முன்பாகவே கொடுக்கப்பட்டு அதனை நான் பயன்படுத்தி வருகிறேன். அந்த மின் இணைப்பு எங்களது வீட்டிற்கு தெற்கு பக்கம் இருந்த மின்சார கம்பம் மூலமாக கொடுக்கப்பட்டு இருந்தது. எங்களது வீட்டிற்கு மின் இணைப்பு வந்த பாதையில் மாட்டுக்கொட்டகை இருந்ததால், அவர்கள் வேலை செய்யும் போது அதனருகில் இருந்த மின்கம்பத்திலிருந்து மின் இணைப்பு கம்பி அடிக்கடி கீழே விழுந்ததால், மின்சார துறையினர் வந்து பார்வையிட்டு, அவசர தேவைகளுக்காக, அந்த மின் இணைப்பு கம்பியை அந்த வழியிலிருந்து அகற்றி எனது மகள் மல்லிகா வீட்டின் மின் இணைப்பு பெட்டியில் மாட்டி, அதன் மூலமாக எனது வீட்டிற்கு மின் இணைப்பு கொடுத்தார்கள். அதனால், நான் எனது வீட்டிற்கு தனியாக புதிய மின்சார கம்பம் வழியில் இணைப்பு வழங்க வேண்டி கடந்த பிப்ரவரி மாதம் கடைசி வாரத்தில் எனக்கு பேரன் உறவுமுறையான ராஜபாண்டி உதவியுடன் புதிய மின்சார கம்பம் வழியில்

மாற்றி இணைப்பு கொடுப்பதற்கான விண்ணப்பத்தை நிரப்பி, எனது கைரேகை வைத்து, எனது வீட்டின் சொத்து வரி ரசீது, எனது வீட்டின் பட்டா, வி.ஏ.ஓ. சான்றிதழ், எனது ஆதார் அடையாள அட்டை ஆகியவற்றை இணைத்து, அந்த விண்ணப்பத்தை டி. இராமநாதபுரத்திலிருந்து எம். கல்லுப்பட்டி செல்லும் மெயின் ரோட்டில் உள்ள டி. இராமநாதபுரம் மின்சார அலுவலகத்திற்கு சென்று நான் அங்கிருந்த ஏ.இ. பிரபு அவர்களிடம் நேரடியாக கொடுத்தேன். அவர் அந்த மனுவை வாங்கி கொண்டு, என்னிடம், இதையெல்லாம் ஆன்-லைனில் பதிவு செய்ய வேண்டும், அதனை நான் பார்த்து கொள்கிறேன், உங்களுக்கு மின் இணைப்பு கொடுக்க, அரசுக்கட்டணம் மற்றும் எனக்கு னியாக செலவுக்கு பணம் என மொத்தம் ரூ.15,000/-த்தை கொடுக்க வேண்டும் என சொன்னார். நான் அப்போது அவரிடம் அரசுக்கட்டணம் தவிர, உங்களுக்கு எதற்காக தனியாக செலவுக்கு என்று அவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என கேட்டேன். அதற்கு அவர் எனக்கும் தனியாக செலவுக்கு நீங்கள் கட்டாயமாக பணத்தை கொடுத்தால்தான் வேலை நடக்கும் என்று சொல்லி இன்று மதியத்திற்குள் வந்து பணத்தை கொடுங்கள் என கண்டிப்புடன் அப்போது சொன்னார். நானும், அவர் கேட்ட பணம் ரூ.15,000/-த்தை கொடுத்தால்தான் புதிதாக மின் இணைப்பு கிடைக்கும் என எண்ணி அந்த சமயத்தில், வேறு வழியின்றி எனது பேத்திக்காக சேமித்து வைத்திருந்த பணத்திலிருந்து ரூ.15,000/-த்தை எடுத்து அன்று மதியமே டி.இராமநாதபுரம் மின்சார அலுவலகத்திற்கு சென்று ஏ.இ. பிரபு அவர்களிடம் கொடுத்தேன். அப்போது, அவர் என்னிடம், மின்சார இணைப்பு கொடுப்பதற்கான பாதையை நேரில் வந்து பார்த்துவிட்டு, அவருக்கு மேலும், தனியாக செலவுக்கு தரவேண்டிய பணத்தை பற்றி பிறகு சொல்கிறேன் என அப்போது சொன்னார். அதன்படி இரண்டு நாட்கள் கழித்து டி. இராமநாதபுரம் ஏ.இ. பிரபு மற்றும் சில பணியாளர்கள் எனது வீட்டை நேரில் வந்து பார்வையிட்டுவிட்டு, எங்கள் வீட்டிற்கு கிழக்கே உள்ள மெயின் ரோட்டிலிருந்து அங்கு ஒரு போஸ்ட் வைத்தும், எனது வீட்டிற்கு அருகே ஒரு போஸ்ட் வைத்தும் அங்கிருந்து புதிய மின்சார கம்பி வழியில் மாற்றி இணைப்பு கொடுக்கலாம் என்றும், அதற்கு அரசாங்க அனுமதி வேண்டி நடவடிக்கை எடுப்பதாகவும் சொல்லிவிட்டு இது சம்பந்தமாக அவரை தேர்தல் முடிந்த பின்பு அவரது அலுவலகத்தில் வந்து சந்திக்குமாறு சொன்னார். அதனைத் தொடர்ந்து நான்கு மாதங்களுக்கு மேலாகியும், எனது வீட்டிற்கு புதிய மின் இணைப்பு அமைத்து கொடுக்காததால், கடந்த 09.07.2026-ம் தேதி வியாழக்கிழமை காலை சுமார் 10:30 மணிக்கு, நான் டி.இராமநாதபுரம் மின்சார அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த

ஏ.இ. திரு. பிரபு அவர்களிடம் எனது வீட்டிற்கு புதிய மின்சார கம்பம் வழியில் மின் இணைப்பு வழங்குவது குறித்து கேட்ட போது, ஏ.இ. பிரபு அவர்கள் என்னிடம் உங்களுக்கு புதிதாக மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்றால் ஏற்கனவே அவருக்கு கொடுத்த பணம் ரூ.15,000/-ம் தவிர மேலும் ரூ.7,000/-த்தை அவருக்கு கொடுக்க வேண்டும் என அப்போது சொன்னார். அதற்கு நான் அவரிடம் நானே விவசாயம் செய்து தனியாக பேத்தியுடன் வசித்து வருகின்றேன், அரசுக்கு கட்ட வேண்டிய பணத்துடன், உங்களுக்கும் சேர்த்து மொத்தம் ரூ.15,000/-த்தை ஏற்கனவே நான் கொடுத்து விட்டேன், உங்களிடம் அரசுக்கு கட்டிய பணத்திற்கான இரசீதை கேட்டதற்கு, நீங்கள் வேலை எல்லாம் முடிஞ்ச பிறகு இரசீதை தேடி எடுத்து தருகிறேன் என சொல்கிறீர்கள், நீங்கள் மீண்டும் பணம் கேட்கிறீர்களே, உங்களுக்கு என தனியாக பணம் ஏதும் வாங்கி கொள்ளாமல் அரசு வேலையை செய்து கொடுங்கள் என கேட்டேன். அதற்கு ஏ.இ. பிரபு அவர்கள், நீங்கள் கொடுத்த பணத்தை உங்களுக்கு மின்இணைப்பு மாற்றி வழங்க அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையை கட்டி விட்டேன், எனக்கு ரூ.5,000/- தனியாக செலவுக்கு கொடுக்க வேண்டும், ரூ.2,000/-த்தை போஸ்ட்டை ஏற்றி, இறக்கி, தோண்டி வேலை செய்பவர்களுக்கும் கொடுத்ததால்தான் உங்களுக்கு புதிய மின் கம்பங்கள் அமைத்து மின் இணைப்பு கொடுக்க முடியும் என்று கண்டிப்பாக சொன்னார். அதற்கு நான் அவரிடம் தற்போது என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என சொன்னேன். அதற்கு ஏ.இ. திரு. பிரபு அவர்கள் பணத்தை கொண்டு வந்து கொடுத்தால்தான் வேலை நடக்கும் என சொல்லி என்னை அனுப்பிவைத்து விட்டார். அதன் பின்னர், பணம் புரட்ட முயன்றும் என்னால் முடியவில்லை. அதனால், மூன்று நாட்கள் கழித்து மீண்டும் திங்கள்கிழமை 13.07.2026-ஆம் தேதி காலை சுமார் 11:00 மணியளவில், டி. இராமநாதபுரம் மின்சார அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த ஏ.இ. திரு. பிரபு அவர்களிடம் எனது வீட்டிற்கு புதிய மின்கம்பங்கள் அமைத்து புதிய மின்சார கம்பி வழியில் இணைப்பு கொடுப்பது சம்பந்தமாக கேட்ட போது, ஏ.இ. திரு. பிரபு அவர்கள் என்னிடம், நீங்கள் நான் கேட்ட பணம் ரூ.5,000/-த்தை கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டார். நான் அதற்கு, தற்போது அவ்வளவு பணம் என்னால் புரட்டமுடியல, கொஞ்சம் குறையுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் கோபப்பட்டு, பணம் ரூ.5,000/-த்தை ரெடி பண்ணி என்னிடம் கொண்டு வந்து கொடுத்துவிட்டு உங்கள் வேலையை முடித்து கொள்ளுங்கள் எனச்சொன்னார். என்னால் பணத்தை புரட்ட முடியாததால் நான் அதன்பின்பு இ.பி. அலுவலகம் செல்லவில்லை. பின்னர், இன்று 20.07.2026-ம் தேதி

காலை சுமார் 10.45 மணிக்கு டி. இராமநாதபுரம் மின்சார அலுவலகத்திற்கு ஜூலை மாதத்திற்குகான மின்கட்டணம் செலுத்துவதற்கு சென்று மின்கட்டணம் ரூ.167/-யை கட்டி அதற்கான இரசீதை பெற்றேன். பின்னர், அங்கு ஆபிசில் இருந்த ஏ.இ. பிரபு அவர்களை சந்தித்து, எனது வீட்டிற்கு புதிய மின்கம்பங்கள் அமைத்து புதிய மின்சார கம்பி வழியில் இணைப்பு கொடுப்பது சம்பந்தமாக கேட்ட போது, ஏ.இ. திரு. பிரபு அவர்கள் என்னிடம், நீங்கள் நான் கேட்ட பணம் ரூ.5,000/-த்தை கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டார். அதற்கு, நான் இன்னும் பணத்தை ஏற்பாடு செய்யவில்லை எனச்சொன்னேன். அப்போது, ஏ.இ. பிரபு அவர்கள் என்னிடம், நாளை காலை இதே நேரத்திற்கு அலுவலகத்திற்கு வந்து நான் கேட்ட பணம் ரூ.5,000/-த்தை என்னிடம் கொடுங்கள், உடனடியாக புதிய மின்கம்பங்கள் அமைத்து புதிய மின்சார கம்பி வழியில் உங்கள் வீட்டிற்கு மின் இணைப்பு கொடுத்து விடுகிறேன், அதற்கான போஸ்ட்டை ஏற்றி, இறக்கி, தோண்டி வேலை செய்பவர்களுக்கு தனியாக ரூ.2,000/-த்தை கொடுங்கள் என்று கோபபட்டுச் சொன்னார். நானும் வேறு வழியின்றி சரியென்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். பின்னர், மதியம் வீட்டிற்கு சுமார் 12.00 மணியளவில் வந்த போது, எனது வீட்டிற்கு வந்திருந்த எனது கணவரின் தம்பி சங்கரன் அவர்களிடம் புதிய மின்சார கம்பி வழியில் 2 மின் கம்பங்கள் அமைத்து புதிதாக மின் இணைப்பு கொடுக்க ஏ.இ. பிரபு அவர்கள் அவருக்கு தனியாக செலவுக்கு லஞ்சமாக ரூ.5,000/-மும், போஸ்ட்டை ஏற்றி, இறக்கி, தோண்டி வேலை செய்பவர்களுக்கு ரூ.2,000/-மும் கேட்ட விபரத்தை சொன்னேன். அதற்கு அவர் நாம் ஏ.இ. பிரபுக்கு தனியாக செலவுக்கு என லஞ்சப்பணம் ஏதும் கொடுக்க கூடாது, அரசு வேலை செய்ய அரசாங்கத்திற்கு கட்டணத்தை கொடுத்துவிட்டோம், பிறகு தனியாக அவருக்கு எதுக்கு பணம் தரவேண்டும் என வருத்தப்பட்டு சொன்னார். நானும், ஏ.இ. பிரபுக்கு தனியாக அவரது செலவுக்கு அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.5,000/- கொடுக்க வேண்டாம் என முடிவு செய்தேன். அதன் பின்னர், நான், எனது கொளுந்தனார் சங்கரன் அவர்களை துணைக்கு அழைத்து கொண்டு திருமங்கலம் பேருந்து நிலையம் அருகே வந்து, அங்கிருந்த கம்ப்யூட்டர் கடையில் வைத்து நான் சொல்ல சொல்ல இந்த புகார் மனுவை தட்டச்சு செய்தோம். நான் உரிய அரசுக்கட்டணம் செலுத்திய பின்னரும், என்னிடம் ரூ.5,000/- லஞ்சம் கேட்கும் டி.இராமநாதபுரம் மின்சார அலுவலக ஏ.இ. திரு. பிரபு மீது உரிய நடவடிக்கை எடுக்க கேட்டு இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். இத்துடன் நான் புதிதாக மின்சார கம்பி வழியில் மின் இணைப்பு வேண்டி ஏ.இ. திரு. பிரபு அவர்களிடம் கொடுத்த விண்ணப்பம் மற்றும் அதனுடன் கொடுத்த எனது வீட்டின்

சொத்துவரி ரசீது, எனது வீட்டின் பட்டா, வி.ஏ.ஓ. சான்று, எனது ஆதார் அட்டை ஆகியவற்றின் நகல், எங்களது வீட்டின் மின் இணைப்புக்கு 2026-ஜூலை மாதம் மின்சார கட்டணம் அரசுக்கு கட்டிய கட்டண ரசீது ஆகியவற்றை இணைத்துள்ளேன். மேலும், ஏ.இ. திரு. பிரபு அவர்கள் என்னிடம் கேட்ட லஞ்சப்பணம் ரூ.5,000/-த்தையும் கொண்டு வந்துள்ளேன். எனவே, திரு. பிரபு மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த புகாரை, எனது கணவரின் தம்பி சங்கரன் அவர்கள் எனக்கு படித்து காண்பிக்க சரியாக இருந்தது. இப்படிக்கு, கீரல் (குருவம்மாள்)

Sir, Received the typed complaint this day on 20.07.2026 at 15:45 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Directorate of Vigilance and Anti-Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 10/2026, u/s 7 (a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 17:15 hrs and took up investigation Sd./-XXXXXX [N. BharathiPriya] 20.07.2026, Inspector of Police, V&AC, Madurai.

Original FIR along with original typed complaint of Tmt. Guruvammal, W/o. (Late) Periyasankaran, Door No.3/72, West Street, S.Pappinayakkanpatti Peraiyur Taluk, Madurai District along with Photo copy of New EB Connection Application of P.Guruvammal along with her house property receipt, her house site patta, S.Pappinayakkanpatti VAO's certificate, Guruvammal's Aadhar Card and original EB Payment Receipt Dated : 20.07.2026 are enclosed herewith and submitted to the Hon'ble Principal District Judge, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

20-7-2026

(N. BHARATHIPRIYA)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.